**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பண்ருட்டி.**

**முதலேற்பு வழக்கு எண். 77/2007**

**2026 ம் ஆண்டு மார்ச்-26 ம் நாள் வியாழன்கிழமை**

பெயர் : இதையரசு எத்திராஜீலு

சாட்சி : (DW3)

கணவர் பெயர் : குப்புசாமி

நேரம் : 11.05 AM to 12.00AM

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் பாதிரிக்குப்பத்தில் சுமார் 20 வருடமாக குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்துவருகிறேன். இந்த வழக்கில் 2ம் பிரதிவாதி குப்புசாமி நாயுடு என்னுடைய தந்தை ஆவார். எனது தந்தை கடந்த 25.03.2010 ல் நிலுவையில் இருக்கும் போது இறந்து விட்டார். எனது தந்தை இறந்த பிறகு நான் எனது தாயார் மற்றும் சகோதரிகளை இந்த வழக்கில் 2ம் பிரதிவாதியின் வாரிசுதாரர்களாக சேர்க்கப்பட்டனர். மனுதாரர் தரப்பில் 2ம் பிரதிவாதி இறப்பு தேதி 25.03.2011 என்று தான் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் அது குறித்து நான் எந்த ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல எனது தந்தை கடந்த 25.03.2010 தான் காலமானார். எனது தந்தையின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழினை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வழக்கு நிலுவையில் இருக்கும் போது எனது தாயார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருடைய இறப்பு தேதி எனக்கு ஞாபகம் இல்லை- என்னுடைய தாயாரின் இறப்பு சான்றிதழினை நான் வைத்து உள்ளேன். எனது தாயாரின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் புவனேஸ்வரி, ராஜேஸ்வரி மற்றும் லோகநாயகியை தவிர வேறு யாரும் வாரிசு இல்லை.

2. ராமனுஜம் இந்த வழக்கில் கூறியுள்ள விவரங்கள் பற்றி நான் படித்தேன். வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என்னுடைய நிலத்தில் வழக்கு இல்லை . நான் இளநிலை அறிவியல் (இயற்பியல்) தமிழ் வழியில் கல்வி படித்தேன். இந்த வழக்கில் எனது தந்தை எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியும் என்றால் தெரியாது. இந்த வழக்கில் எனது சகோதரிகளோ நானோ தனியாக

எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது சகோதரிகளை சாட்சிகளாக விசாரிக்கபோகின்றேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் ராமனுஜம் யார் யாரை விசாரணை செய்துள்ளார் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எங்களது தரப்பில் குபேரன் மற்றும் யார் யார் என்னென்ன ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கிற்காக முதன் முதலில் 05.03.2026 சாட்சியத்திற்காக வந்தேன்.

3. பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் வழக்கறிஞர் கூறினார். வழக்கு சொத்திற்கு உண்டான ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. பட்டா மட்டும் எனது தந்தை பெயரில் உள்ளது. நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு சொத்தில் நானோ எனது மூதாதையர்களோ அனுபவத்தில் இருந்ததற்கு இந்நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. கோபால் கவுண்டருக்கு வழக்கு சொத்து பாத்தியம் என்பதற்கு ஆவணம் எதுவும் நான் பார்தேனா என்றால் என்னிடத்தில் இல்லை. கோபால் கவுண்டர் என்பவரிடம் கிரையம் பெற்றதற்கான தேதி எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி கிரைய ஆவணத்திற்கு யார் யாரிடம் , எந்த தேதியில் வாங்கியது என்ற விவரம் எனக்கு தெரியாது. கோபால் கவுண்டரிடம் இருந்து குபேரன் கிரையம் வாங்கியதற்கு என்னிடம் ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. குபேரனிடம் தான் ஆவணம் உள்ளது. என்னுடைய தந்தை தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை நானும் எனது சகோதரிகளும் ஏற்றுக்கொள்வதாக கூறி குறிப்பானை தாக்கல் செய்துள்ளோம். அந்த குறிப்பானை எதிர்வழக்குரையை படித்த பிறகு நான் தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. குபேரன் கோபால் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்ற சொத்திற்கு பழைய சர்வே எண்.375/4. குபேரன் கோபால் என்பவரிடமிருந்து கிரையம் பெற்ற சொத்திற்கு புதிய சர்வே எண்.95/4, 5 மற்றும் 6. புதிய மற்றும் பழைய பட்டா எண் எனக்கு தெரியாது. எனக்கு சக்குபந்தி தெரியும். பாண்டுரங்கன் படையாட்சி இடத்திற்கு மேற்கு, ராமானுஜம் படையாட்சி நிலத்திற்கும் வடக்கு மற்றும் கிழக்கு பாதைக்கு தெற்கு. மொத்தம் விஸ்தீரணம் 32 செண்ட் ஆகும். 8 செண்ட் வாய்மொழி கிரையமாக கோபால் கவுண்டர் குபேரனுக்கு கொடுத்தார். எந்த தேதியில் வாய்மொழியாக கிரையம் கொடுத்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. 8 செண்டிற்கு சக்குபந்தி

எனக்கு தெரியும். குபேரன் கிரையம் வாங்கிய நிலத்திற்கு மேற்கு, ராமானுஜம் நிலத்திற்கு வடக்கு மற்றும் கிழக்கு பாதைக்கு தெற்கு. மேற்படி 8 செண்டும் பழைய சர்வே எண்.375/4 ல் உள்ளடக்கமாகும். புதிய சர்வே எண். 95/4 ,5 மற்றும் 6 ஆகும். பட்டா எண் எனக்கு ஞாபகம் இல்லை. குபேரன் கோபால் என்பவரிடமிருந்து வாய்மொழியாக கிரையம் பெற்ற 8 செண்ட் கோபாலுக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று அதற்குண்டான ஆவணம் உள்ளதா என்றால் கோபாலுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தாகும். ஆவணம் உள்ளதா என்று எனக்கு தெரியாது.

5. கோபாலிடமிருந்து குபேரன் கிரையம் பெற்ற 32 செண்டிற்கு கோபாலுக்கு எப்படி பாத்தியம் என்றால் கோபாலுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது ஆகும். கோபாலுடன் பிறந்தவர்கள் எனக்கு தெரியாது. கோபாலுக்கு என்னென்ன சொத்து இருந்தது என்னென்ன சர்வே எண்ணில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. கோபால் குபேரனுக்கு கிரையம் கொடுத்த விவரத்தை எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்பட்டுள்ளது. எனது தந்தையுடன் பிறந்தவர்கள் ஒரு சகோதரர் மற்றும் ஒரு சகோதரி ஆவார். எனது சித்தப்பாவின் பெயர் ஜெயராமன் எனது அத்தை பெயர் சரோஜா. எனது தாத்தாவின் பெயர் பரசுராம நாயுடு. எனது தாத்தாவுடன் பிறந்தவர்கள் மூன்று பேர். மன்னார் சாமி நாயுடு, புருஷோத்தமன் மற்றும் தாமோதரன். எனது தாத்தாவுடன் பிறந்தவர்களுக்கு எவ்வளவு சொத்துக்கள் எந்த தேதியில் எப்படி பாகம் பிரிக்கப்ட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. அதேபோல் எனது சித்தப்பா , அப்பா மற்றும் அத்தைக்கு எப்போது எந்த தேதியில் எந்த சொத்து எந்த சர்வே எண் எவ்வளவு விஸ்தீரணம் ஒதுக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் நானோ எனது தந்தையோ எனது தாத்தா அனுபவித்து வந்ததற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. வழக்கு சொத்திற்குண்டான பட்டா எண். எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு சர்வே எண். 375/4. பழைய சர்வே எண். 375/4 ற்கு என்னென்ன பட்டா எண் உள்ளது என்று தெரியாது. குபேரன் கோபாலை தவிர வேறு யாரிடமாவது கிரையம் பெற்றுள்ளாரா என்றால் வேறு யாரிடமும் கிரையம் பெறவில்லை. கோபாலை தவிர மற்ற நபர்களிடமிருந்து கிரையம் பெற்றதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு இருந்தால் தவறு தானே ஆகும் என்றால் தவறு தான் என்று முதலில் சாட்சியம் அளித்து விட்டு பிறகு அதைப்பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்தார்.

குபேரன் மற்ற நபர்களிடமிருந்து கிரையம் பெற்றதாக 1ம் பிரதிவாதி பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருந்தால் தவறு தானே என்றால் தவறு தான். குபேரன் மற்றும் பி.வா.சா2 என்ன பிராமாண வாக்குமூலம் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் சாட்சியம் அளிப்பதற்கு முன் எனது வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொள்வில்லை என்றால் தெரிந்துகொள்ளவில்லை.

7. வழக்கு சொத்து ஆதியில் எனது பாட்டனார் கிரையம் பெற்று அதற்கு பின் வாதியின் தந்தை அனுபவித்து வந்து அவரது தந்தையின் காலத்திற்கு பின் வாதி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவர் வாங்கிய சொத்து வேறு இடத்தில் உள்ளது. வழக்கு சொத்து தான் வாதியின் பாட்டானார் கிரையம் பெற்ற சொத்து என்றாலும் நான் வேண்டும்மென்றே வேறு சொத்து என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாட்டனாரின் பூர்வீக சொத்து ஆகும். எனது பாட்டனாரின் பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து எந்த காலத்திலும் பாட்டனாருக்கோ எனது தந்தைக்கோ குபேரனுக்கோ எங்களுக்கோ எந்த வித பாத்தியமோ அனுபவமோ இல்லை என்றால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் தவறு என்றால் சரியல்ல. நான் ஏற்றுக்கொண்ட எதிர்வழக்குரையில் உள்ள அம்சங்கள் தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வாதியின் வழக்கை எதிர்த்து பொய்யான விவரங்களை கூறி குபேரன் எனது தந்தை மற்றும் நாங்கள் வேண்டும்மென்றே வழக்காடி வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் அப்படி பட்ட நபர்கள் இல்லை. வாதியின் அனுபவத்தை மற்றும் உரிமையை மறுக்கவும் மற்றும் இடையூறு செய்யவும் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த சொத்து எங்கள் சொத்து. எங்கள் சொத்து என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை இத்துடன் முடிக்கப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**